**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 31.07.2024ஆம் நாளன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்**

**பொருள் எண்.01**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் 2023–2024ம் ஆண்டு நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு, பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1124/2024/சி1)**

**அலுவலகக்குறிப்பு:–**

அ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் : 32**

**தீர்மானம் : பதிவு செய்யப்படுகிறது.**

**பொருள் எண்.02**

இந்நகராட்சிக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக திரு.பி.ஆனந்த வழக்கறிஞர் அவர்களை வாதாட நிலை சட்ட ஆலோசகர் (Standing Counsel)–ஆக நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.162/2024/பி1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 33**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.03**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் நுண்ணுயிர் உரமாக்கல் மையத்திற்கு அருகில் ஏற்கனவே தேக்கி வைக்கப்பட்டுள்ளது குப்பைகளை நம்பியூர் ரோட்டில் உள்ள உரக்கிடங்கிற்கு Bio Mining முறையில் கையாளுவதற்காக எடுத்துச்செல்ல வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட குப்பைகளை JCB இயந்திரம் மற்றும் டிப்பர் வாரி மூலம் எடுத்துச்செல்லவும் மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1126/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 34**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.04**

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.161/செ.ம.தெர.அ/2024 நாள்.11.06.2024ன் படி தமிழ்நாடு அரசு 3 ஆண்டுகள் முடிவடைந்து 4ஆம் ஆண்டு துவங்கியுள்ள நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 3 ஆண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக்கூறும் வகையில் தினத்தந்தி நாளிதழின் சார்பில் விடியல் ஆட்சியின் 3 ஆண்டு சாதனை என்ற பெயரில் 25.06.2024 அன்று அரசு துறைகள் சார்பில் விளம்பரம் செய்ய தெரிவிக்கப்பட்டது.

அதன்படி இந்நகராட்சியில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த விவரத்தினை கடந்த 25.06.2024 அன்று தினத்தந்தி சிறப்பு மலரில் வெளியிடப்பட்டதற்கும், அதற்கான செலவினம் ரூ.21420/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.985/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 35**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.05**

இந்நகராட்சிக்கு எதிராக திரு.சண்முகசுந்தரம் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No.10432/2023 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். அரசு சார்பாக வாதாடிய சிறப்பு அரசு வழக்கறிஞர் திரு.ஹஜா நசீருதீன் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.40,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.739/2021/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 36**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.06**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021./UPA நாள்.08.09.2023 இல் சாலையோர நடைபாதை வியாபரிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், முறைப்படுத்தவும், இதற்கான இந்திய அரசு சட்டம் 2014 அத்தியாயம் – II பிரிவு 3 இன் படி 5 வருடத்திற்கு ஒரு முறை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு, கண்க்கெடுப்பு பணி முடிக்கப்பட்டவுடன், அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் வியாபாரச்சான்று வழங்கப்பட வேண்டும். எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சாலையோர நடைபாதை வியாபாரிகளின் விற்பனைக் குழுவை தேர்தல் நடத்தப்பட்டு தேர்வு செய்து அமைக்கப்பட வேண்டும். எனவும் மேலும் வியாபார மண்டலம் மற்றும் வியாபாரமற்ற மண்டலம் அடையாளம் கண்டறிந்து பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும் எனவும், மற்றும் சாலையோர வியாபார திட்ட அறிக்கை தயார் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் விபரத்தை ஏற்கனவே நகர்மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்:24 நாள்.28.06.2024 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது கீழ்காணும் விபரப்படியான விற்பனைக்குழு அமைப்பதற்கு தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் சாலையோர விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் 2015 விதி 13(1) இன் படியும் மற்றும் கீழ்காணும் விபரப்படியும் விற்பனைகுழுவை தேர்வு செய்ய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

<u>6 உறுப்பினர்கள் கொண்ட விற்பனைக்குழு</u>

| | | |
|---|---|---|
| 1 | தாழ்த்தப்பட்டோர் வகுப்பை சார்ந்தவர் | 01 உறுப்பினர் |
| 2 | மகளிர் வகுப்பினர் | 01 உறுப்பினர் |
| 3 | மாற்றுத்திறனாளிகள் | 01 உறுப்பினர் |
| 4 | சிறுபான்மையினர் | 01 உறுப்பினர் |
| 5 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 01 உறுப்பினர் |
| 6 | பொது / பிற வகுப்பினர் | 01 உறுப்பினர் |

எனவே, கீழ்காணும் விவரப்படி சாலையோர வியாபாரிகளுக்கான விற்பனைக்குழு தேர்வு செய்ய தேர்தல் அறிவிக்கையின் படி தேர்தல் நடத்திடவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000 (ஒரு லட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>தேர்தல் அறிவிக்கை</u>

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>

1) The Street Vendors (Protection of live hood and Regulation of Street Vendors) Act 2014 (Central Act 7 of 2014)
2) The Director of Municipal Administration. Chennai letter Roc.No.20789/2021/UPA Dated.08.09.2023
3) G.O. (Ms) No.159 Municipal Administration and Water Supply Department ( MAWSI) Dated .23.12.2014
4) Tamil Nadu Government Gazette. Chennai Monday November10.2015 AIPPASI16 Man Madhs. Thiruvalluvar Andu 2046

**Rules : II**

**Town Vending Committee**

**நகர விற்பனைக்குழு**

**உறுப்பினர் தேர்வு செய்தல் விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 01 |
| 2 | மகளிர் உறுப்பினர் | 01 |
| 3 | மாற்றுத்திறனாளிகள் உறுப்பினர் | 01 |
| 4 | சிறுபான்மையினர் உறுப்பினர் | 01 |
| 5 | பிற்படுத்தப்பட்ட வகுப்பு உறுப்பினர் | 01 |
| 6 | பொது / பிற வகுப்பினர் | 01 |

**(உறுப்பினர் பொறுப்புக்கான வைப்புத் தொகை ரூ.2,000/-)**

**தேர்தல் நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| 1 | நகர விற்பனைக்குழுவில் சாலையோர வியாபாரிகள் 6- உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க உறுப்பினர்களின் வேட்பு மனு பெறப்படும் நாள் | 19.08.2024. 22.08.2024 வரை காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை |
| 2 | வேட்பு மனு பெற கடைசி நாள் | 20.08.2024 பிற்பகல் 3.00 மணி வரை |
| 3 | வேட்பு மனு பரிசீலனை செய்யும் நாள் | 21.08.2024 |
| 4 | வேட்பு மனு திரும்ப பெறப்படும் நாள் | 22.08.2024 |
| 5 | இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | 22.08.2024 |
| 6 | தேர்தல் நடைபெறும் நாள் | 29.08.2024 காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| 7 | வாக்குகள் எண்ணப்படும் நாள் | 30.08.2024 காலை 10.00 மணி முதல் |
| 8 | தேர்தல் முடிவு நாள் | 30.08.2024 |
| 9 | நகர விற்பனைக்குழு அறிக்கை செய்தல் (Town Vending Committee Notification) | 04.09.2024 |
| 10 | தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் நகர விற்பனைக்குழு கூட்டம் நடைபெறும் நாள் | 09.09.2024 |

**(ந.க.எண்.646/2016/எப்1)**

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 37**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.07

இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்று பள்ளிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் கடந்த ஆகஸ்ட்2023ஆம் மாதம் முதல் உணவு வழங்குதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்கண்ட பணியினை ஒப்பந்த அடிப்படையில் நடத்தி வந்த ஒப்பந்ததாரர் திருவாளர்.அன்னை கேட்டரிங், சத்தியமங்கலம் என்பவர் அன்னாரின் தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கண்ட பணியினை தொடர்ந்து மேற்கொள்ள இயலாது என்றும், மேலும் மேற்கண்ட பணியினை எதிர்வரும் ஆகஸ்ட்–2024 உடன் முடித்துக்கொள்ள விரும்புவதாக தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார். எனவே மேற்படி பணிக்கான ஒப்பந்தத்தை ஆகஸ்ட்–2024 உடன் முடித்துக்கொள்ளவும், மேற்கண்ட பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.428/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 38**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.08

இந்நகராட்சியில் 2023–2024ஆம் ஆண்டுக்குரிய இயல்புநிலை கணக்குகளை வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி கணக்கு முடிக்க துணை பதிவேடுகள், சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை இனம், அச்சம் மற்றும் அருவருக்கதக்க பதிவேடு (D&O), முன்பண பதிவேடு மற்றும் வைப்புத்தொகை பதிவேடுகளின் கணக்குகளை ஆண்டு கணக்குகளுடன் ஒப்பீடு செய்தும், நகராட்சியில் பராமரிக்கப்படும் செலவின பதிவேடுகள் மற்றும் வங்கி கைச்சாத்து புத்தகத்துடன் இணக்கம் செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு கணக்குகளை முடித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் தணிக்கைக்கு சமர்பிக்க வேண்டியுள்ளதால் M/s.SUN DATA COM [THAMARAISELVI] என்பவருக்கு இப்பணியினை வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,25,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.300/2020/பி1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 39**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.09**

இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2024-2025ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோககுழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், ஆகஸ்ட் 2024 முதல் நவம்பர் 2024 வரை உள்ள 4 மாதகாலத்திற்கு பராமரிப்புபணி மேற்கொள்ளுதல் பணிக்காக 16.07.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள் மற்றும் விநியோககுழாய்கள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், ஆகஸ்ட் 2024 முதல் நவம்பர் 2024 வரை உள்ள 4 மாதகாலத்திற்கு பராமரிப்புபணி மேற்கொள்ளுதல் பணி | திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| | | திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி | 1.80% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.05% குறைவாக வழங்கியுள்ள திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.893/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 40**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2024-2025ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், ஆகஸ்ட் 2024 முதல் நவம்பர் 2024 வரை உள்ள 4 மாதகாலத்திற்கு பராமரிப்பு பணிமேற்கொள்ளுதல் பணிக்காக 16.07.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள், வால்வுகள், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் பிரதான குழாய்கள், ஏர்வால்வுகள் ஆகியவற்றின் பழுதுகள் மற்றும் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், ஆகஸ்ட் 2024 முதல் நவம்பர் 2024 வரை உள்ள 4 மாதகாலத்திற்கு பராமரிப்பு பணிமேற்கொள்ளுதல் பணி | திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| | | திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி | 1.75% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.06% குறைவாக வழங்கியுள்ள திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.892/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 41**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.11</u>

இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2024–2025ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணாநகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டார்கள், நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின்சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின்சாதனப்பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள்

சரிசெய்யவும், ஆகஸ்ட் 2024 முதல் நவம்பர் 2024 வரை உள்ள 4 மாத காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணிக்காக 16.07.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு . ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், அண்ணாநகர் நீருந்து நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டார்கள், நகராட்சி கட்டிடங்களில் உள்ள மின்சாதனப் பொருட்கள், பொதுக்கழிப்பிடங்களில் உள்ள மின்சாதனப்பொருட்கள் ஆகியவற்றின் பழுதுகள் சரிசெய்யவும், ஆகஸ்ட் 2024 முதல் நவம்பர் 2024 வரை உள்ள 4 மாத காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி | திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| | | திரு.சி.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி | 1.60% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.04% குறைவாக வழங்கியுள்ள திருமதி.ந.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.891/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 42**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.12

இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2024-2025ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு ·குளோரின் கேஸ் சிலிண்டர் விநியோகம் செய்தல் பணிக்காக 16.07.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு குளோரின் கேஸ் சிலிண்டர் விநியோகம் செய்தல் பணி | M/s. I Tech Systems, Erode | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| | | M/s. Shriniketha Enterprises, Chittode | 1.50% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.10% குறைவாக வழங்கியுள்ள M/s. I Tech Systems, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.896/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 43**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.13

இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2024-2025ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Chlorination Plantஐ வருடாந்திர பராமரிப்பு (AMC) செய்தல் பணிக்காக 16.07.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Chlorination Plantஐ வருடாந்திர பராமரிப்பு (AMC) செய்தல் பணி | M/s. I Tech Systems, Erode | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |
| | | M/s. Shriniketha Enterprises, Chittode | 1.65% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.08% குறைவாக வழங்கியுள்ள M/s. I Tech Systems, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.895/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 44**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2024–2025ன் கீழ் இந் நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள வெளிக்கொணர்வு முகமை மூலம் 12 பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளும் பணிக்காக 16.07.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள வெளிக்கொணர்வு முகமை மூலம் 12 பணியாளர்களை விநியோகம் செய்தல் பணி | திரு.V.ஜெயராஜ், கோயம்புத்தூர் | 0.30% மதிப்பீட்டை விட குறைவு |
| | | M/s. R.K.Sevai Maiyam, Coimbatore | 0.30% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.30% குறைவாக வழங்கியுள்ள திரு.V.ஜெயராஜ், புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.889/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 45**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.15

இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2024–2025ன் கீழ் இந் நகராட்சிக்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் 2 தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியமர்த்துதல் பணிக்காக 16.07.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் 2 தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியமர்த்துதல் பணி | திரு.V.ஜெயராஜ், கோயம்புத்தூர் | 0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| | | M/s. R.K.Sevai Maiyam, Coimbatore | 0.22% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.11% குறைவாக வழங்கியுள்ள திரு.V.ஜெயராஜ், கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.889/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 46**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.16

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு வணிக வளாக கடைகள் , எம்.ஜி.ஆர் வணிக வளாக கடைகள் மற்றும் வாரச்சந்தை வணிக வளாக கடைகள் கட்டி 40 வருடங்களை கடந்துள்ளதால் மேற்கண்ட கடைகள் ஸ்திரத்தன்மை இழந்துள்ளது. எனவே மேற்குறிப்பிட்டுள்ள வணிக வளாக கடைகளை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய கடைகள் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 22.06.2024 அன்று நடைபெற்ற சட்டமன்ற மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் புன்செய்ப் புளியம்பட்டியில் புதிய வணிக வளாக கடைகள் அமைக்க திறக்க நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. தற்போது மேற்படி ஜவஹர் மெயின் ரோடு வணிக வளாக கடைகள், எம்.ஜி.ஆர் வணிக வளாக கடைகள் மற்றும் வாரச்சந்தை வணிக வளாக கடைகள் இடித்து விட்டு புதிய வணிக வளாக கடைகள் அமைக்க ஏதுவாக மேற்படி கடைகள் கட்டவுள்ள இடத்திற்கு DTCP அனுமதி பெற உத்தேச செலவினம் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1769/2022/இ1)

அலுவலக குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 47**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.17</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட வணிக வளாக கடைகளுக்கு 2024-2025 முதல் 2027-2028 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு 23.07.2024 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் உயர்ந்தபட்ச தொகையாக ஏலம் கோரிய நபர்களுக்கு உரிமம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | உரிமம் விவரம் | தற்போது ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | அரசு மதிப்பு தொகை | ஏலம் கோரிய தொகை | உயர்ந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | சத்திரம் ரோடு வடக்கு பார்த்த கடை எண்- 3 | I.முகமது அலி | 5750 | 10,000 | 10,000 |
| | | G.நித்யானந்தன் | | 9600 | - |
| 2 | சத்திரம் ரோடு வடக்கு பார்த்த கடை எண் - 4 | I.முகமது அலி | 5750 | 9,000 | 9000 |
| | | G.நித்யானந்தன் | | 8500 | - |
| 3 | சத்திரம் ரோடு வடக்கு பார்த்த கடை எண் - 7 | V.சுகந்தன் | 5465 | 5700 | 5700 |
| | | A.சரவணக்குமார் | | 5600 | - |

(ந.க.எண். 785 /2021/அ1)

அலுவலக குறிப்பு:

1. உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய சத்திரம் ரோடு வடக்கு பார்த்த கடை எண்-3க்கு திரு. I.முகமது அலி என்பவருக்கு ,
2. உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய சத்திரம் ரோடு வடக்கு பார்த்த கடை எண்-4க்கு திரு. I.முகமது அலி என்பவருக்கு ,
3. உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரிய சத்திரம் ரோடு வடக்கு பார்த்த கடை எண்-7க்கு திரு.V.சுகந்தன் என்பவருக்கு ஆகிய மூவருக்கும் உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 48**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.18</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட வணிக வளாக கடைகளுக்கு 2024–2025 முதல் 2027–2028 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு 11.07.2024 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச தொகையாக ஏலம் கோரிய கீழ்க்கண்டுள்ள நபர்களுக்கு உரிமம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | உரிமம் விவரம் | தற்போது ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | அரசு மதிப்பு தொகை | பொது ஏலத்தில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| 1 | சத்திரம் ரோடு வடக்கு பார்த்த கடை எண்.10 | G.கவிதா | 4500 | 4700 |
| 2 | சத்திரம் ரோடு வடக்கு பார்த்த கடை எண்.13 | K.சுரேஷ் | 4500 | 5100 |

(ந.க.எண்.1135/2015/அ1)

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட குத்தகையினங்களில் வரிசை எண்.1 மற்றும் வரிசை எண்.2இல் அரசு மதிப்பை விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதால் ஒப்பந்த்தாரருக்கு உரிமம் வழங்கலாம்.

**தீர்மான எண் : 49**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.19</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான 7 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள Water Level Monitroing System–ஐ பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், அதற்காக பயன்படுத்தப்படும் i–Tank என்ற மென்பொருளுக்கு ஒரு வருடத்திற்கு தேவையான Recharge செய்யவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.890/2024/இ1)

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியினை 2024–2025 ஆம் ஆண்டின் குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 50**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.20**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் இனத்திற்கான ஏலம் 01.04.2023 முதல் தற்போது வரை 7முறை ஏலம் விடப்பட்டது. ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. மேலும், 11.07.2024ஆம் தேதியன்று நடைபெற்ற ஏலத்தில் திரு.கே.நடராஜ் என்பவர் ஏலத்தொகை ரூ.6,72,000/- கோரியுள்ளார். 01.04.2023 முதல் அலுவலகம் மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. தினசரி இரண்டு நபர்களைக் கொண்டு வசூல் பணி மேற்கொள்ளப்படுவதால் இரண்டு நபர்களுக்கு மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.80,000/- ஊதியம் வழங்கப்படுகிறது. மேலும், மின்சார கட்டணம் மாதம் ஒன்றுக்கு தொகை ரூ.3,000/- மற்றும் கழிப்பறை தூய்மை செய்யும் தூய்மை பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.30,000/- செலவாகிறது மேலும் கழிவறை சுத்தம் செய்யும் பணிக்கு கிருமி நாசினிகளான பினாயில், பிளீச்சிங் பவுடர், கிளீனிங் ஆசிட் ஆகியவற்றிற்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 5000/- வீதம் வருடத்திற்கு செலவினம் ரூ.14.22 இலட்சம் ஏற்படுகிறது. தற்போது உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.6,72,000/- கோரப்பட்டுள்ளது. மறுஏலம் கொண்டு வரும் பட்சத்தில் வருடத்திற்கு நகராட்சிக்கு ரூ.7,50,000/- நிதியிழப்பு ஏற்படுகிறது. எனவே, மேற்படி உயர்ந்தபட்ச ஏலம் கோரிய திரு.கே.நடராஜ் அவர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.825/2023/அ2)**

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண் : 51**

**தீர்மானம் : நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு உயர்ந்தபட்ச ஏலம்கோரிய திரு.கே.நடராஜ் அவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.21**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு வணிக வளாக கடைகள், எம்.ஜி.ஆர் வணிக வளாக கடைகள் மற்றும் வாரச்சந்தை வணிக வளாக கடைகள் ஆகிய கடைகள் கடைகள் கட்டி 40 வருடங்களை கடந்துள்ளதால் மேற்படி கடைகளை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக கடைகள் கட்ட திட்ட மதிப்பீடு தயார் செய்தல் பணிக்கு தனியார் கலந்தாலோசகர் நியமனம் செய்யவும், மேற்படி பணிக்கு தேவையான திட்ட மதிப்பீடு தயார் செய்வதற்கு Jawaharlal Nehru National Urban Renewal Mission, Government of India வகுத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்படும் திட்ட மதிப்பீட்டு தொகைக்கு 1% தொகை தனியார் கலந்தோலோசகருக்கு வழங்கவும் ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண்.25 நாள்.28.06.2024ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2024–2025–ன் கீழ் மேற்படி பணிக்கு ரூ.325.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்தல் பணிக்கு ரூ.3.25 இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1769/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 52**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.22</u>

இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் குறிப்பின் படி சத்திரம் இடத்தில் பேட்டரி வாகனம் சார்ஜ் செய்வதற்கு ஏதுவாக மேற்கண்ட இடத்தில் Wiring பணிகள் மேற்கொள்ளவும் மேலும் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி செய்து தரவும், Celing Fan மற்றும் Tube Light பொருத்தவும் ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1188/2024/இ1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 53**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.23</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு (DBC – DOMESTIC BREADING SOURCE CONTROLOR) 300 வீடுகளுக்கு ஒரு கொசு ஒழிப்பு பணியாளரை நியமிக்க வேண்டும் எனவும் மேற்படி பணியாளர்கள் தினமும் 50 வீடுகள் என்ற கணக்கில் ஆறு நாட்களுக்கு 6X50=300 வீடுகளில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி பகுதியில் மொத்தம் 18 வார்டுகளில் அமைந்துள்ள 7735 குடியிருப்புகளில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மொத்தம் 7735/300= 26 கொசு ஒழிப்பு பணியாளர்களை நியமனம் செய்திட வேண்டி உள்ளது. மேலும் தற்போது மழைக்காலம் என்பதால் நோய் தொற்றுகள் ஏதும் பரவாதவாறு பொதுமக்களை பாதுகாத்திடவும் மற்றும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி 26

பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திடவும் அவர்களுக்கான ஊதியம் நாள் ஒன்றிற்கு ரூ.589.39/– வீதம் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ச ஊதியம் மாவட்ட அரசிதழில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் ஊதியம் வழங்கிடவும் 4 மாத காலத்திற்கு பணி மேற்கொள்ளவும் ஆகும் செலவினம் ரூ.19.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1176/2024/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 54**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**(ஓம்)திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**//உண்மைநகல் உத்தரவுப்படி//**

**ஆணையாளருக்காக**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

31/7/2024